# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 14–ஆம் நாள் திங்கட்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆனித் திங்கள் 30–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.248/2018 –ல்**

**இடைநிலை மனு எண்.6/2024**

**நித்யா ... மனுதாரரர்/வாதி.**

**–எதிர்–**

**1. சாந்தி**
**2. அய்யனார்**
**3.அனுசுயா**
**4.பிரேமா**
**5.மைனர் சந்தோஷ்குமார்**
**அதன் காப்பாளர் தாயார் பிரேமா**
**6.ஆர்.உமா மகேஷ்வரி**
**7.ஆர்.மீனாட்சி**
**8.தனபால்**
**9.கருப்பண்ணன் ... எதிர்மனுதாரரர்கள்/பிரதிவாதிகள்.**
**10.கே.மோகன் ராஜ்**
**11.ஆர்.செந்தில்குமார்**
**12.எஸ்.நடராஜ்**
**13.வி.தனலட்சுமி ... உத்தேச 10 முதல் 13 எதிர்மனுதாரரர்கள்/ பிரதிவாதிகள்.**

இந்த மனு இன்று (14.07.2025) இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.G.நரசிம்மன்** அவர்களும் 04-ஆம், 05-ஆம் எதிர்மனுதாரரர்கள் முதலேற்பு வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக உள்ள நிலையில் 01 முதல் 03 வரையிலான எதிர்மனுதாரரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.R.அருண்குமார்** அவர்களும் 06-ஆம், 07-ஆம் எதிர்மனுதாரரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.S.ராஜாராம்** அவர்களும் 10 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.R.கருணாகரன்**

அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

**ஆணையுரை**

வழக்கு நிலுவையில் இருந்தபோது வழக்குச் சொத்தின் ஒரு பகுதியை கிரயம் வாங்கிய இந்த மனுவின் 10 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்களை முதலேற்பு வழக்கில் 10 முதல் 13 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் **01-**ஆம் வகுமுறையின் **10-**ஆம் விதியின்கீழ் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதி 01 முதல் 07 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப் பிரிவினை கோரி இந்த முதலேற்பு வழக்கைத் தாக்கல்செய்திருந்தார். வழக்கு நிலுவையில் இருந்து வந்தபோது 02-ஆம் பிரதிவாதி அய்யனார் வழக்குச் சொத்தின் சில பகுதிகளை இந்த மனுவின் 08-ஆம், 09-ஆம் எதிர்மனுதாரர்களுக்கு விற்றுவிட்டார். அவர்களை முதலேற்பு வழக்கில் 08-ஆம், 09-ஆம் பிரதிவாதிகளாக சேர்க்கக் கோரி மனுதாரர்/வாதி தாக்கல் செய்த வழக்கிடை விண்ணப்ப எண்.2/2021-ஆனது 05.03.2022-ஆம் தேதியன்று அனுமதிக்கப்பட்டது.

02. இந்த வழக்கு நிலுவையில் இருந்துவந்த நிலையில் 08-ஆம், 09-ஆம் எதிர்மனுதாரர்கள் அவர்கள் வாங்கிய சொத்துக்களை இந்த மனுவின் 10 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு விற்றுக் கிரயப்

பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர். அவர்கள் இந்த வழக்கில் தேவையான தரப்பினர்களாக உள்ளனர். ஆகையால், அவர்களை முதலேற்பு வழக்கில் 10 முதல் 13 வரையிலான பிரதிவாதிகளாக சேர்த்து ஆணையிட வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

03. 10-ஆம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்து அதை 11 -ஆம், 12-ஆம், 13-ஆம் எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்து பொய்யானவை. இந்த வழக்கு நிலுவையில் இருப்பதுப் பற்றி இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதுவும் தெரியாது. மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு தேவையற்றத் தரப்பினர்கள் ஆவார்கள். இந்த எதிர்மனுதாரர்கள் 01-ஆம், 02-ஆம் பிரதிவாதிகளிடம் இருந்த எந்தச் சொத்தையும் வாங்கவில்லை. ஆகையால், இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

04. 01 முதல் 03 மற்றும் 06, 07-ஆம் எதிர்மனுதாாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

05. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

**தீர்முடிவு**

06. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்குச் சொத்தின் ஒரு பகுதியை 02-ஆம் பிரதிவாதியிடம் இருந்து இந்த மனுவின் 08, 09-ஆம் எதிர்மனுதாரர்கள் கிரயம் வாங்கியதால் அவர்களை வழக்கிடை விண்ணப்ப எண்.2/2021-மூலம் மனுதாரர்/வாதி முதலேற்பு வழக்கில் 08, 09-ஆம் பிரதிவாதிகளாக சேர்த்திருக்கிறார். இந்த வழக்கு நிலுவையிலிருந்து வந்தபோது அவர்களிடம்

இருந்து 10 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்கள் வழக்குச் சொத்தின் ஒரு பகுதியை கிரயம் வாங்கியுள்ளனர் என்பதை அவர்கள் மறுக்கவில்லை. வழக்கு நிலுவையில் இருந்தபோது இந்த எதிர்மனுதாரர்கள் கிரயம் வாங்கியிருப்பதால் நிகழ்வழக்கு கோட்பாடு அடிப்படையில் அவர்களுடைய உரிமை மாற்றம் பாதிக்கப்படும் என்றாலும் பல்முனை வழக்கு நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காக அவர்களை 10 முதல் 13 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் என்று மனுதாரர்/வாதியே கோரி இருக்கும் நிலையில் இந்த மனுவை அனுமதிப்பதே உகந்ததாக இருக்கும் என்றும் இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு அநீதி எதுவும் விளைவிக்கப்படாது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதிமுடிவு**

07. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 14–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:– இல்லை**

உண்மை/வரைவு ஆணையுரை
இ.ம.எண்.06/2024 in
மு.வ.எண்.248/2018
நாள் 14.07.2025